# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 ஆவணி மாதம் 27ம் திகதி முதல் புரட்டாதி மாதம் 02ம் திகதி வரை

***"நீதியைநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்."***

01. புகழ்ச்சிக்கான நோக்கு

- இறை ஆண்டவருடைய பரிசுத்தமான திருவுளத்தின் வழியாக வெளிப்படுவது அவரது தெய்வீகமயமான கருணையும் தெய்வீகமயமான நீதியும் என்பதினால் நாம் அவரது பரிசுத்த நாமத்தை போற்றுவோம். கௌரவ புகழ்ச்சியை செலுத்துவோம். ஏன்னென்றால் அவரது கருணையின் ஒளியினுள் வாழ்வோம், நிலைத்திருப்போமானால் அவர் நமக்கு வெற்றியைப் பெற்றுத்தருவார்.
- புபுது பாடல் இல 156 'கல்வாரி மலைவரை…"

02. கடந்த வாரத்தின் அனுபவங்களை ஞாபகப் படுத்துவோம்.

- பரிசுத்த ஆவியானவர் கடந்த வாரம் முழுவதும் உங்களை வழிநடத்திய விதத்தை தியானித்தவாறு நீங்கள் பெற்ற அனுபவங்களை சங்கமமாக்கிக் கொள்ளுங்கள்.
- அவரது பரிசுத்தமான திருவுளம் உங்களை வழிநடத்திய விதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.

03. நாளுக்குரிய நற்செய்தி

- இறை அரசின் உரிமையை அளிப்பதற்கு அவர் யாரை அழைக்கின்றார்? அவரது பரிசுத்தமான திருவுளத்திற்கு ஏற்ப வாழ்ந்து நீதியை நிலைநாட்டும் பொழுது துன்புறுவோர்க்கே.
- திருப்பாடல் 82 3-6 **"எளியோர்க்கும் திக்கற்றவர்க்கும் நீதி வழங்குங்கள். சிறுமையுற்றோர்க்கும் ஏழைகட்கும் நியாயம் வழங்குங்கள். எளியோரையும் வறியோரையும் விடுவியுங்கள் பொல்லாரின் பிடியினின்று அவர்களுக்கு விடுதலை அளியுங்கள். …நீங்கள் எல்லோரும் உன்னதரின் புதல்வர்கள்"**
- மேற்குறிப்பிட்ட திரு விவிலிய பகுதியை வாசித்து இறை ஆண்டவர் எமக்கு வெளிப்படுத்தும் திருவுளம் என்னவென்பதை பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

04. வார்த்தையின் ஊழியருக்காக

- மனிதனின் உள்ளத்தில் நீதியை குறித்து அதிக தாகம் இருக்கின்றது. ஆகையால் அநீதியை, அநியாயத்தை அனுபவிப்பதற்கு விரும்புவதில்லை. அதை தாங்கிக் கொள்வது கடினமாகும். அவ்வாறான நிலைகள் முன்னிலையில் அவர்கள் அழுது புலம்புவதும், கோபப்படுவதும், சில சமயம் வைராக்கியம் கொண்டு செயல்படுவதும் அதனாலேயே.

- ஆனாலும் இறை ஆண்டவர் எமக்கு முன்மாதிரியாக திகழ்ந்தார். கிறிஸ்தவ சீடர்களாகிய எம்மிடம் கேட்டு நிற்பது அவரது அன்பை முன்கொண்டு நீதியாக செயல்படுமாறு ஆகும்.
- எசாயா 33:15

04. எம் பக்கம்.

- நீதியை நிலைநாட்டும் போது, எமக்கு பலவிதமான துன்பங்களை அனுபவிக்க நேரிடும். ஆனாலும் உண்மையாகவே அது இறை ஆசிர்வாதமாக பழைய ஏற்பாட்டிலும் கூட இறை தந்தை இறைவாக்கினர் வழியாக உறுதிப்படுத்தினார்.
- நன்மையை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள், துன்புறுவோர்க்கு உதவுங்கள், அனாதைகளின் உரிமைகளை பெற்றுக் கொடுங்கள், விதவைகளுக்கு உதவ முன்வாருங்கள், இவ்வாறு நீதியை நிலைநாட்டுங்கள்.

05. இறுதிப் புகழ்ச்சி

- நாம் ஒரு கணம் அமைதியாக இறை ஆண்டவர் முன்னிலையில் தோன்றி நிற்போம். இன்று எமக்கு வெளிப்படுத்திய பரிசுத்தமான திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்கின்ற மனித விருப்பதை இனம்காணுவோம். எமது பாவமான நிலையை அறிந்துக் கொள்வோம்.
- இருக்கின்ற இடத்தில் இருந்து இருக்க வேண்டிய இடத்திற்கு செல்வதற்கு, மனம் வருந்தி மனமாற்றம் அடைவோம்.
- புபுது பாடல் இல 314 ‘‘உமது திருவுளத்தை நிறைவேற்ற……..’’